# உலகின் மிகப் பெரிய ‘இளம் திறமைத் தொழிற்சாலை’ இந்தியா: ஆஸ்திரேலியாவில் பிரதமர் மோடி பேச்சு




**சிட்னி:** திறமைமிக்க இளைஞர்களை அதிகம் கொண்டுள்ள நாடாக இந்தியா இன்று உருவெடுத்திருப்பதாக ஆஸ்திரேலிய நிகழ்வில் பிரதமர் மோடி பேசினார்.

மூன்று நாள் பயணமாக ஆஸ்திரேலியா சென்றுள்ள பிரதமர் மோடி, ஆஸ்திரேலியா வாழ் இந்தியர்களை சிட்னி நகரில் இன்று (செவ்வாய்க்கிழமை) சந்தித்தார். அப்போது பேசிய அவர், "கடந்த 2014-ம் ஆண்டு நான் சிட்னி நகருக்கு வந்து உங்களைச் சந்தித்தேன். அப்போது, 28 ஆண்டுகளுக்குப் பிறகு சிட்னி வந்த முதல் இந்தியப் பிரதமராக நான் இருந்தேன். இந்தியப் பிரதமரை மீண்டும் நீங்கள் சிட்னியில் சந்திக்க 28 ஆண்டுகள் காத்திருக்கத் தேவை இருக்காது என்ற உறுதியை நான் அப்போது உங்களுக்கு அளித்தேன். அதன்படி, தற்போது உங்கள் முன் நான் இருக்கிறேன்.

இந்தியாவையும் ஆஸ்திரேலியாவையும் காமன்வெல்த், கிரிக்கெட், உணவு ஆகியவை இணைப்பதாக ஒரு காலத்தில் சொல்லப்பட்டது. எரிசக்தி, பொருளாதாரம், கல்வி ஆகியவை நம் இரு நாடுகளையும் இணைப்பதாக சிலர் சொல்வார்கள். இவை எல்லாவற்றையும் கடந்தது இந்திய - ஆஸ்திரேலிய உறவு என்பது எனது நம்பிக்கை. இது பரஸ்பர நம்பிக்கை, பரஸ்பர மரியாதை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் மேற்கொண்ட ராஜதந்திர உறவுகளால் மட்டும் ஏற்பட்டுவிடவில்லை.

உண்மையான காரணம், உண்மையான சக்தி ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இந்தியர்களாகிய நீங்கள்தான்.

சிட்னியில் உள்ள ஹாரிஸ் பூங்காவில் இந்திய உணவு வகைகளும் இனிப்பு வகைகளும் மிகவும் பிரசித்தம் என கேள்விப்பட்டேன். எனது நண்பரான ஆஸ்திரேலிய பிரதமர் அல்பனீசை நீங்கள் அங்கே அழைத்துச் செல்ல வேண்டும். ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் ஷேன் வார்னர் கடந்த ஆண்டு இறந்தபோது நூற்றுக்கணக்கான இந்தியர்கள் துக்கமடைந்தோம். நெருக்கமான ஒருவரை இழந்துவிட்டதுபோன்ற துக்கம் அது.

உலகப் பொருளாதாரத்தின் ஒளிப்புள்ளியாக இந்தியா திகழ்வதாக சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது. உலகின் பொருளாதார வளர்ச்சி குறைவுக்கு யாராவது சவால் விடுகிறார்கள் என்றால், அது இந்தியாதான் என்று உலக வங்கி கூறியுள்ளது. பல நாடுகளில் வங்கி செயல்முறை சிக்கலில் உள்ளது. ஆனால், இந்திய வங்கிகள் வலிமை அடைந்து பாராட்டும்படியாக செயல்பட்டு வருகின்றன.

100 ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் பெரும் நெருக்கடி வந்தபோதும், ஏற்றுமதியில் கடந்த ஆண்டு இந்தியா சாதனை படைத்துள்ளது. இந்தியாவின் அந்நிய கையிருப்பு புதிய உச்சத்தில் உள்ளது. டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் இந்தியா அடைந்துள்ள வளர்ச்சியை நீங்கள் அறிவீர்கள். நிதித்துறையிலும் தொழில்நுட்ப புரட்சியை இந்தியா நிகழ்த்தி இருக்கிறது.

இந்தியர்களின் வாழ்க்கை முறைக்கும் ஆஸ்திரேலியர்களின் வாழ்க்கை முறைக்கும் வேறுபாடு இருக்கலாம். ஆனால், யோகா நம்மை இணைக்கிறது. நீண்ட காலமாக கிரிக்கெட் நம்மை இணைத்து வருகிறது. இப்போது டென்னிஸும், திரைப்படங்களும் நம்மை இணைக்கின்றன. தொலைக்காட்சி நிகழ்ச்சியான Masterchef நிகழ்ச்சியும் தற்போது நம்மை இணைத்து வருகிறது.

இந்தியாவில் திறமைக்கும் வளங்களுக்கும் பஞ்சமே இல்லை. இன்று இந்தியா மிகப் பெரிய மற்றும் இளமையான திறமை தொழிற்சாலையாக உள்ளது.

ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் விரைவில் இந்திய துணைத் தூதரகம் திறக்கப்படும்" என்று பிரதமர் மோடி பேசினார்.

## 4 புதிய நீதிபதிகள் பதவியேற்பு: சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 64 ஆக உயர்வு



**சென்னை:** சென்னை உயர் நீதிமன்றத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நான்கு கூடுதல் நீதிபதிகள் செவ்வாய்க்கிழமை பதவியேற்றுக் கொண்டனர். இவர்களுடன் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை 64 ஆக உயர்ந்துள்ளது.

மாவட்ட நீதிபதிகள் அந்தஸ்தில் இருந்த உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளர் பி.தனபால், கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி ஆர்.சக்திவேல், சென்னை தொழிலாளர் நீதிமன்ற முதன்மை நீதிபதி சி.குமரப்பன், கோவை மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி கே.ராஜசேகர் ஆகிய நான்கு பேரை சென்னை உயர் நீதிமன்ற கூடுதல் நீதிபதிகளாக நியமித்து குடியரசுத் தலைவர் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

புதிய நீதிபதிகள் பதவியேற்பு நிகழ்ச்சி, சென்னை உயர் நீதிமன்றம் வளாகத்தில் உள்ள கூடுதல் கூட்ட அரங்கில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், பொறுப்பு தலைமை நீதிபதி டி. ராஜா, புதிய நீதிபதிகளுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். புதிய நீதிபதிகளுடன் சேர்த்து சென்னை

உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 64 ஆக உயர்ந்தது. இன்னும் 11 நீதிபதி பணியிடங்கள் காலியாக உள்ளன.

புதிய நீதிபதிகளை வரவேற்றுப் பேசிய தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர் ஆர்.சண்முகசுந்தரம், "புதிய நீதிபதிகளான சக்திவேல், தனபால் மற்றும் குமரப்பன் ஆகியோர் உயர்நீதிமன்ற தலைமைப் பதிவாளர்களாகவும், நீதிபதி ராஜசேகர் தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணைக்குழு உறுப்பினர் செயலராகவும், உயர் நீதிமன்றத்துடன் நெருங்கிய தொடர்பில் இருந்ததால், உயர் நீதிமன்றத்தின் மரபுகளை உறுதிப்படுத்துவார்கள்" என்றுகுறிப்பிட்டார்.

"பத்து ஆண்டுகளுக்கும் மேல் மாவட்ட நீதிபதிகளாக பணியாற்றிய புதிய நீதிபதிகளின் அனுபவம் சிறந்த முறையில் பலனளிக்கும்" என தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் தலைவர் அமல்ராஜ் குறிப்பிட்டார்.

மேலும், பல்வேறு வழக்கறிஞர்கள் சங்கங்களின் நிர்வாகிகள், புதிய நீதிபதிகளை வரவேற்று பேசினர். பின்னர் ஏற்புரையாற்றிய நீதிபதி சக்திவேல், "உயர் நீதிமன்றத்தின் கண்ணியத்தைக் காக்கும் வகையில் பணியாற்றுவதற்கு உரிய பலத்தை இயற்கை தனக்கு வழங்க வேண்டும்" எனத் தெரிவித்தார்.

நீதிபதி தனபால், பள்ளிப்படிப்பு முதல் தமிழ் வழியில் படித்ததாகவும், தமிழ் வழியில் படித்த வழக்கறிஞர்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாக கருத வேண்டாம் எனவும் இயலாதது என்று எதுவுமில்லை என்றும் குறிப்பிட்டார்.

நீதிபதி குமரப்பன், "நீதித்துறை மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை வலுப்படுத்தும்" என்று தெரிவித்தார்.

## நீடித்த வளர்ச்சியைப் பெற ஜி-20 நாடுகளுடன் இணைந்து இந்தியா செயல்படும்: மத்திய அரசு

**ஸ்ரீநகர்:** நீடித்த நிலையான வளர்ச்சியைப் பெற ஜி-20 நாடுகளுடன் இணைந்து இந்தியா செயல்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஜி-20 கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றுள்ள நிலையில், சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கில் ஜி-20 சுற்றுலா பணிக்குழு கூட்டம் ஸ்ரீநகரில் நேற்று தொடங்கியது. மூன்று நாட்கள் நடைபெறும் இந்த கூட்டத்தில் பங்கேற்பதற்காக ஜி-20 உறுப்பு நாடுகள், அழைப்பு நாடுகள், சர்வதேச அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஸ்ரீநகருக்கு வருகை தந்துள்ளனர். ஸ்ரீநகரில் உள்ள ஷெர் இ காஷ்மீர் சர்வதேச மாநாட்டு மையத்தில் இந்த கூட்டம் நடைபெற்று வருகிறது.இன்றைய கூட்டத்தில், ஜம்மு காஷ்மீர் ஆளுநர் மனோஜ் சின்ஹா, மத்திய அமைச்சர்கள் ஜிதேந்திர சிங், கிஷன் ரெட்டி உள்ளிட்டோர் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் பேசிய ஆளுநர் மனோஜ் சின்ஹா, "அறிவின் மையமாக, ஞானத்தின் மையாக எப்போதும் இருக்கும் நிலப்பகுதி ஜம்மு காஷ்மீர். அண்டை நாட்டின் மூலம் ஊக்குவிக்கப்பட்ட பயங்கரவாதத்தால் இந்த மாநிலம் கடந்த 30 ஆண்டுகளாக அமைதியை இழந்து தவித்தது.

பிரதமர் நரேந்திர மோடி கொண்டு வந்த வளர்ச்சித் திட்டங்கள் காரணமாக மாநிலம் முன்னேறி உள்ளது. வளர்ச்சிக்கான பாதையில் ஜம்மு காஷ்மீர் அடி எடுத்து வைத்துள்ளது. வளர்ச்சி, அமைதி, முன்னேற்றம் இவையே ஜம்மு காஷ்மீரின் தாரக மந்திரம். இந்தியாவின் வளர்ந்த மாநிலங்களில் ஒன்றாக தற்போது ஜம்மு காஷ்மீர் முன்னேறி இருக்கிறது" எனத் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங், "கைவினைப் பொருட்களை அதிக அளவில் கொண்டுள்ள மாநிலம் ஜம்மு காஷ்மீர். உலகின் உயரமான ரயில்வே பாலம் இங்குதான் உள்ளது. பொருளாதாரம், சுற்றுச்சூழல், சமூகம் ஆகிய விவகாரங்களில் சர்வதேச பங்களிப்பை வழங்க இந்தியா தயாராக உள்ளது. இங்குள்ள இளைஞர்கள் திறமையானவர்கள். மத்திய அரசு

வழங்கி வரும் பல்வேறு வாய்ப்புகள் குறித்து அறிந்தவர்கள் அவர்கள். பிரதமர் மோடி தலைமையிலான உலகின் முன்னேற்றப் பயணத்தில் தானும் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்று ஸ்ரீநகரில் உள்ள சாமானிய இளைஞரும் கருதுகிறார்" என குறிப்பிட்டார்.

"நீடித்த நிலையான வளர்ச்சியை உலக மக்களும் நாம் வாழும் கோளும் பெற வேண்டும். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஜி20 நாடுகளுடன் சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து மேற்கொள்ள இந்தியாவின் சுற்றுலாத்துறை உறுதி பூண்டிருக்கிறது" என மத்திய அமைச்சர் கிஷன் ரெட்டி தெரிவித்தார்.

## பப்புவா நியூ கினி நாட்டின் மொழியில் திருக்குறள் வெளியிட்டார் பிரதமர் மோடி: தலைசிறந்த படைப்பு என புகழாரம்



**போர்ட் மோரெஸ்பி:** பப்புவா நியூ கினி நாட்டின் தோக்பிசின் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறளை பிரதமர் நரேந்திர மோடி நேற்று வெளியிட்டார்.

தென்மேற்கு பசிபிக் கடலில் பப்புவா நியூ கினி நாடு உள்ளது. இந்த நாட்டின் தலைநகர் போர்ட் மோரெஸ்பியில் இந்திய - பசிபிக் தீவுகள் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாடு நேற்று நடந்தது. இதில் பிரதமர் மோடி பங்கேற்றார்.

இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக, பப்புவா நியூ கினியின் தேசிய மொழியான தோக் பிசின் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறளை பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டார். இந்த நூல் வெளியீட்டு விழாவின் வீடியோ, புகைப்படங்களை அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

ட்விட்டர் பதிவுகளில் அவர் கூறியிருப்பதாவது: பப்புவா நியூ கினி நாட்டில் தோக் பிசின் மொழியில் திருக்குறளை வெளியிட்ட பெருமை எனக்கும், பிரதமர் ஜேம்ஸ் மாரப்புக்கும் கிடைத்துள்ளது. திருக்குறள் நூல் தலைசிறந்த படைப்பு ஆகும். இது பல்வேறு துறைகளில் மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங்குகிறது

## இங்கிலாந்தின் கவென்ட்ரி நகர மேயரான சீக்கியர்

**லண்டன்:** இங்கிலாந்தின் கவென்ட்ரி நகர மேயராக சீக்கியர் ஜஸ்வந்த் சிங் பிர்டி தேர்வு செய்யப்பட்டு உள்ளார்.

இந்தியாவின் பஞ் சாப் மாநிலத்தை பூர்வீகமாகக் கொண்ட ஜஸ்வந்த் சிங் பிர்டியின் குடும்பம் கடந்த 1960-ம் ஆண்டில் இங்கிலாந்தின் கவென்ட்ரி நகரில் குடியேறியது.

கடந்த 4-ம் தேதி இங்கு கவுன்சிலர் பதவிகளுக்கு தேர்தல் நடத்தப்பட்டது. கடந்த 18-ம் தேதி மேயர் பதவிக்கு தேர்தல் நடைபெற்றது. கவென்ட்ரி மேயர் பதவிக்கான தேர்தல் கட்சி அடிப்படையில் நடைபெறாது. திறமை, நேர்மையின் அடிப்படையில் மேயரை தேர்வு செய்ய கவுன்சிலர்கள் வாக்களிப்பார்கள். அந்த அடிப்படையில் கவென்ட்ரி மாநகராட்சியில் தொழிலாளர் கட்சிக்கு பெரும்பான்மை இருந்தபோதிலும் திறமை, நேர்மையின் அடிப்படையில் கன்சர்வேட்டிவ் கட்சியை சேர்ந்த சீக்கியர் ஜஸ்வந்த் சிங் பிர்டி மேயராக தேர்வு செய்யப்பட்டார்.

சுமார் 17 ஆண்டுகள் கவுன்சிலராகவும் ஓராண்டு துணை மேயராகவும் பிர்டி பதவி வகித்துள்ளார். அந்த அனுபவத்தின் அடிப்படையில் மாநகராட்சியை வழிநடத்துவேன் என்கிறார் பிர்டி.

இங்கிலாந்தில் டர்பன் அணிந்த முதல் சீக்கிய மேயர் என்ற பெருமையையும் ஜஸ்வந்த் சிங் பிர்டி பெற்றுள்ளார்.

EVA STALIN IAS ACADEMY